# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2482/12 - 2026 අප්‍රේල් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2026.04.02

*2482/12 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ச் சட்டம்**

1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2026, ஏப்பிறல் 02.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2026 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்ட, 2023 சனவரி மாதம் 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகள் இத்தால் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றன.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் முன்வைத்த 2026, மாச்சு 26 ஆம் திகதிய 26/0597/817/017 ஆம் இலக்க ஒன்றிணைந்த விஞ்ஞாபனம் தொடர்பான 2026, மாச்சு 30 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இவ் ஒழுங்குவிதிகள் விதிக்கப்படுகின்றன.

4. 2025, ஏப்பிறல் 29 ஆம் திகதிய 2434/12 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/77 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க விசேட இறக்குமதி உரிம ஒழுங்குவிதிகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தாலும், அரிசித் தொகையை கப்பலேற்றப்பட்ட திகதி 2026, ஏப்பிறல் 02 முதல் 2026 ஏப்பிறல் 30 வரையான காலப்பகுதிக்குள் கப்பல் ஏற்றுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள, சம்பா மற்றும் கீரி சம்பாவிற்கு முறையே மாற்றீடாகக் கருதப்படும் மற்றும் இயைபு முறைக் குறியீடு 1006.30.29 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள, பொன்னி சம்பா மற்றும் கிரி/ பால் பொன்னி அரிசி உள்ளிட்ட GR 11 அரிசி என அழைக்கப்படும் அரிசி வகையை இறக்குமதி செய்வதற்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத் தேவை இத்தால் நீக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இவ் ஒழுங்குவிதிகளின் கீழ், இறக்குமதியாளரொருவருக்கு சம்பா மற்றும் கீரி சம்பாவிற்கு மாற்றீடாகக் கருதப்படும் பொன்னி சம்பா மற்றும் கிரி/ பால் பொன்னி அரிசி உள்ளிட்ட GR 11 அரிசியை அதிகபட்சமாக 1,040 மெட்றிக் டொன் மாத்திரம் கப்பலேற்றுமதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கப்பலேற்றிய திகதி 2026, ஏப்பிறல் 02 மற்றும் 2026, ஏப்பிறல் 30 இற்கு இடைப்பட்ட தினமொன்றில் இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

5. மேலே ஒழுங்குவிதி இலக்கம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரிசித் தொகையை 2026, மே 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை சுங்கத்திலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும்.

6. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு அல்லது வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு "செயற்பாட்டு ஆலோசனைகள்" வழங்கப்பட வேண்டும்.

7. இவ் ஒழுங்குவிதிகள் 2026, ஏப்பிறல் 02 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

EOG 04 - 0042

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது